**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 15.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

# திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
# மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண்கள். SA 9901/SCIC/2023, SA 2024/SCIC/2023, SA 5955/SCIC/2023 SA 170/SCIC/2023, SA 3484/SCIC/2023, SA 11407/SCIC/2023, SA 15396/SCIC/2023 & SA 14686/SCIC/2023

திரு.கணேசன்.S ... மேல்முறையீட்டாளர்
எண்.5/12, 2வது தெரு
ஸ்ரீ பால விநாயகர் நகர்
அரும்பாக்கம், சென்னை - 600 106.

/எதிர்/

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
தூத்துக்குடி பதிவு மாவட்டம்
தூத்துக்குடி
2.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
புதூர், தூத்துக்குடி மாவட்டம், .... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

**<u>SA 9901/SCIC/2023:</u>**

1.மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 16/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ புதூர் சார்பதிவாளர் அலுவலகம், புதூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ பொருள்: ஜமீன் நிலம், சர்க்கார் மனை - முற்றிலும் அரசுக்கு உரிமையான பகுதிகள் - த.சி.ப. துரைப்பாண்டியன் என்பவரின் பெயரில் நடைபெற்ற ஆவணப் பதிவுகள் தொடர்பாக - மொத்த ஜமீன் நிலங்களின் பரப்பளவு எவ்வளவு என்பதை தெளிவான தகவலாகத் தருக ” என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை

வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.67/2023, நாள் 18/04/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 24/04/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 02/06/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 9901/SCIC/2023 ஆக பதிவு செய்து, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 09/08/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.139/2024, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

**SA 2024/SCIC/2023:**

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 07/11/2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ புதூர் சார்பதிவாளர் அலுவலகம், புதூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், " பொருள்: அரசு நிலம் மீட்பு நடவடிக்கை தொடர்பாக - ஆவண எண்.1331/1974- பதிவு ரத்து தொடர்பான நடவடிக்கைகள் குறித்து மாவட்டப் பதிவாளர் எடுத்த அலுவலக ரீதியான நடவடிக்கைகள் குறித்து தகவல் வழங்குக " என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.7881/2023, நாள் 07/12/2022 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

4. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 19/12/2022 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர்/துணைப் பதிவுத்துறைத் தலைவர் திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.8920/உ/2022 நாள் 26/12/2022 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 02/02/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 2024/SCIC/2023 ஆக பதிவு செய்து, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 11/04/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.6168/ஆ4/2024, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

**SA 5955/SCIC/2023:**

5. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 12/10/2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், " பொருள்: தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புதூர் கிராமம், 46/82 பதிவெண் கொண்ட சங்கம் தொடர்பான மாறுபட்ட தகவல்கள் - தொடர்பாக - சங்கங்கள் பதிவு செய்யப்படும்பொழுது, சங்கங்களின் சொத்துக்கள் குறித்து ஆவணப்பதிவு ஏன் நடைபெறுவதில்லை என்பதை தகவலாக வழங்குக " என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள்

மனுதாரருக்கு ந.க.எண்.7344/அ3/2022, நாள் 05/11/2022 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

6. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 23/11/2022 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 30/03/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 5955/SCIC/2023 ஆக பதிவு செய்து, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 07/06/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.7517/அ3/2023, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

**SA 170/SCIC/2023:**

7. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 11/10/2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ புதூர் சார்பதிவாளர் அலுவலகம், புதூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ பொருள்: தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புதூர் கிராமம். ஆவணப்பதிவு எண்.1331/1974, நாள் 13/08/1974 - தொடர்பாக - மேற்சொன்ன ஆவணப்பதிவு எண்.1331/1974 எந்த அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தகவலாக தருக” என்பன போன்று 10 (பத்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.143/2022, நாள் 11/11/2022 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

8. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 22/11/2022 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.8383/ஆ4/2022 நாள் 20/12/2022 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 03/01/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 170/SCIC/2023 ஆக பதிவு செய்து, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 27/03/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.140/2024, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

**SA 3484/SCIC/2023:**

9.மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 08/12/2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை-28 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ பொருள்: நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மனு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், புதூர் சார்பதிவாளர் அலுவலகம். ஆவணப்பதிவு எண்.1331/1974, நாள் 13/08/1974 - தொடர்பாக - முன் ஆவணம் ஏதுமற்ற மேற்படி ஆவணம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவினை முழுமையாக தகவலாக வழங்குக” என்பன போன்று 9 (ஒன்பது) இனங்களில் தகவல்களை வழங்கக்

கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ கண்காணிப்பாளர் "C" பிரிவு, பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை-28 அவர்கள் மனுதாரரின் மனுவை அசலாக பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து கடித எண்.44280/சி1/2022, நாள் 26/12/2022 வாயிலாக மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி மனுதாரருக்கு உரிய காலக்கெடுவிற்குள் தகவல்களை நேரடியாக வழங்க அறிவுறுத்தியுள்ளதோடு, அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார்.

10. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 18/01/2022 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 25/02/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 3484/SCIC/2023 ஆக பதிவு செய்து, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 17/04/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரரின் மனுவை பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்து பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர், புதூர் அவர்களுக்கு ந.க.எண்.6286/ஆ4/2024, நாள் 22/10/2024 வாயிலாக அனுப்பி, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை நேரடியாக அனுப்ப அறிவுறுத்தியுள்ளதோடு, அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/சார்பதிவாளர், புதூர் சார்பதிவகம் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.144/2024, நாள் 24/10/2024 வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு தனது ஆட்சேபணை மனுவை அனுப்பியுள்ளார்.

**SA 11407/SCIC/2023:**

11. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 21/03/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், " பொருள்: ஆவண ரத்து தொடர்பாக நடைபெற்ற விசாணை முடிவில் வழங்கப்பட்ட இறுதியாணை (மூ.மு.எண்.1345/ஆ4/2021, நாள் 30/03/2022) தொடர்பாக - மனுதாரர் சென்னையிலிருந்து ஆஜரானார். ஆனால் எதிர்மனுதாரர்கள் யாரும் தென்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆஜர் பட்டியல் சமர்ப்பிக்கவும் " என்பன போன்று 13 (பதின்மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.2098/ஆ4/2023, நாள் 24/04/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

12. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 02/05/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 26/06/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 11407/SCIC/2023 ஆக பதிவு செய்து, மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தின் 16/11/2023 தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.6167/ஆ4/2024, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

**SA 15396/SCIC/2023:**

13. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 11/04/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ பொருள்: 3/2005 பதிவெண் கொண்ட சங்கம் - அதன் அங்கத்தினர்கள் மற்றும் வருடாந்திர அறிக்கை தொடர்பாக - ஒரு சங்கத்தின் 46/82 சங்கத்தின் சொத்துக்களை 3/2005 சங்கம் எவ்வித நிர்வாக செய்ய பதிவுத்துறையின் எந்த சட்டம் அனுமதி தருகின்றது என்பதை தகவலாக வழங்குக ” என்பன போன்று 10 (பத்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.2666/அ3/2023, நாள் 26/04/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

14. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 02/06/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.4467/அ3/2023, நாள் 03/07/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார். மேலும், மேல்முறையீட்டு அலுவலர்/துணைப் பதிவுத்துறைத் தலைவர், திருநெல்வேலி அவர்கள் எண்.4513/ஊ/2023-2, நாள் 15/06/2023 வாயிலாக, பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்களை, மனுதாரருக்கு உரிய காலக்கெடுவிற்குள் தகவல்களை வழங்க அறிவுறுத்தியுள்ளதோடு, அதன் நகலை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளார்.

15. அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 28/08/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 15396/SCIC/2023 ஆக பதிவு செய்தது. பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.6181/அ3/2024, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

**SA 14686/SCIC/2023:**

16. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 16/06/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “ பொருள்: சங்கம் - சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு எண்.W.P.(MD) No.078 of 2023 - தொடர்பாக - அரசு வழக்கறிஞரின் மனுவில் நாள் 25/01/2023 கூறப்பட்டுள்ளவற்றை தகவலாக வழங்குக ” என்பன போன்று 6 (ஆறு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.4206/அ3/2023, நாள் 05/07/2023 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளார்.

17. பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 11/07/2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் /துணைப்பதிவுத்துறைத் தலைவர், திருநெல்வேலி அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.5610/ஊ/2023, நாள் 07/08/2023 வாயிலாக பதில் அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 16/08/2023 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 14686/SCIC/2023 ஆக பதிவு செய்தது. பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி

அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.6197/அ3/2024, நாள் 22/10/2024 வாயிலாக இனவாரியாக பதில் அனுப்பியுள்ளதோடு, அதன் நகலை ஆணையத்திற்கும் அனுப்பியுள்ளார். பின்னர், மனுதாரர் 29/11/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை மனு அனுப்பியுள்ளார்.

18. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 15/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கும், பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**19. மேற்குறிப்பிட்ட 8 (எட்டு) வழக்குகளும் ஒரே பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளதாலும், இதை மனுதாரரும் ஒப்புக் கொண்டதாலும் இவையனைத்தையும் ஒருங்கியலாக விசாரணை செய்ய ஆணையம் முடிவு செய்தது. இன்றைய விசாரணைக்கு, மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.க.அசோகன், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), தூத்துக்குடி பதிவு மாவட்டம் மற்றும் திரு.ந.வேலு, சார்பதிவாளர் (பொ), புதூர் சார்பதிவகம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.**

**20. இன்றைய விசாரணையின் போது, மனுதாரரின் முக்கிய புகாராக, 1 ஏக்கர் 15 சென்ட் பரப்பளவு கொண்ட அரசு நிலத்தை ஆவண எண்.1331/1974 வாயிலாக எவ்வித புல எண்ணையும் குறிப்பிடாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதுகுறித்த தகவல் கோரியே, தான் தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005-ன் கீழ் மனுக்கள் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர், தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலர்/மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் வழக்கு எண்.170/SCIC/-க்கு வழங்கிய தகவலில், அவ்வாறு எந்த ஒரு அரசு நிலமும் தனிநபர்கள் பெயரில் பதிவு செய்யப்படமாட்டாது என்றும் புல எண். குறிப்பிடப்படாமல் எவ்வித ஆவணமும் பதிவு செய்ய அனுமதிக்கப்படாது என்று;ம குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் மனுதாரர் புகார் தெரிவித்தவாறு மேற்குறிப்பிட்ட அரசு நிலத்திற்கான ஆவணம் ஒரு தனி நபரால் மற்றொரு தனி நபருக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார். மேலும், இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்கள்/ மாவட்டப்பதிவாளர், தூத்துக்குடி மாவட்டம், சார்பதிவாளர் (பொ), புதூர் சார்பதிவகம் ஆகியோர் மனுதாரர் குறிப்பிட்டவாறான ஆவண எண்.1331/1974 ஐ ஆணையத்தின் முன் சமர்ப்பித்து, அந்த ஆவணத்தில் எவ்வித புல எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்றும் இருப்பினும் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை ஒப்புக் கொண்டனர்.**

**21. எனவே, மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்கள் இந்தப் பிரச்சினை தொடர்பாக தனிப்பட்ட முறையில் ஒரு முழுமையான விசாரணையை மேற்கொள்வதோடு, விளாத்திகுளம் வட்டாட்சியரை, அவ்விசாரணைக்கு உதவியாக புல எண். உள்ளிட்ட வருவாய்த்துறை விவரங்கள் மற்றும் ஆவணங்களை சரியான றையில் இனம் காண ஏதுவாக பயன்படுத்திக் கொள்ளுமாறும், அவ்விசாரணை அறிக்கையினை 03/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க**

வேண்டுமென்றும் ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. வருவாய் வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் அவர்கள், மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வதோடு, கோருகின்ற ஆவணங்களின் நகல்களை அளிக்குமாறு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேலும், மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி மற்றும் வருவாய் வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் ஆகியோர் 03/06/2025 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி நடவடிக்கை எடுத்த அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. ஆணையத்தின் அழைப்பாணை (1) மனுதாரர், (2) மாவட்டப் பதிவாளர், தூத்துக்குடி, (3) சார்பதிவாளர், புத்தூர் சார்பதிவகம், (4) வருவாய் வட்டாட்சியர், விளாத்திகுளம் வட்டம் ஆகியோருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட வேண்டும். இவ்வழக்கு ஆணையத்தால் 03/06/2025-க்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண்கள். SA 9901/SCIC/2023, SA 2024/SCIC/2023,</u>**

**<u>SA 5955/SCIC/2023 SA 170/SCIC/2023, SA 3484/SCIC/2023,</u>**

**<u>SA 11407/SCIC/2023, SA 15396/SCIC/2023 & SA 14686/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
தூத்துக்குடி பதிவு மாவட்டம்
தூத்துக்குடி

2.பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
புதூர், தூத்துக்குடி மாவட்டம்,

3. பொதுத் தகவல் அலுவலர்/
வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
விளாத்திகுளம் வட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
**திரு.கணேசன்.S**
**எண்.5/12, 2வது தெரு**
**ஸ்ரீ பால விநாயகர் நகர்**
**அரும்பாக்கம், சென்னை - 600 106.**

RG/PC